

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, கரூர் சட்டமன்ற தொகுதி மண்மங்கலம் சமத்துவ புரத்தில், மாபெரும் கபடி போட்டி நடைபெற்றது. போட்டியை மாவட்ட கழகச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார். ஒன்றிய கழக பொறுப்பாளர் வேலுசாமி, கழக நிர்வாகிகள் அருகில் உள்ளனர்.



அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், ஜெயங்கொண்டம் முதல் அரியலூர், குன்னம், பெரம்பலூர், சேலம் வழியாக பெங்களூர் வரை செல்லும் தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழக புதிய பேருந்து சேவையினை ஜெயங்கொண்டம் பேருந்து நிலையத்திலிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர், ஜெயங்கொண்டம் க.சொ.க.கண்ணன், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, அரசு விரைவு போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர் மோகன், நகரக் கழகச் செயலாளர் வெ.கொ.கருணாநிதி, தனசேகர், ஆர்.கலியபெருமாள், கே.சி.லூயிகதிரவன், பன்னீர்செல்வம், தங்க.ராமகிருஷ்ணன், ச.வசந்தபகலவன், ஆ.கரிகாலன், ம.சேகர், உள்ளிட்ட தொ.மு.ச. தோழர்கள் கொளஞ்சி, செல்வம், குமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் கழகத் தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## கடலோர காவல் படையில் மீனவ மாணவர்களுக்கு முன்னுரிமை தர வேண்டும்!

### மீன்வளப் பல்கலைக் கழகங்கள் கூடுதலாக தொடங்கப்பட வேண்டும்! மீன்வளப் பல்கலைக் கழகங்களில்

# மீனவ மாணவர்களுக்கு இளநிலை அறிவியல் பிரிவில் 50 சதவிகித இடஒதுக்கீடு தருக!

## சட்டப்பேரவையில் – திருவொற்றியூர் கே.பி.சங்கர் கோரிக்கை!

சென்னை. ஏப். 5 – சட்ட பேரவையில். மீன் வளம். கால்நடை உள்ளிட்ட மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய திருவொற்றியூர் தொகுதி கழக உறுப்பினர் கே.பி.சங்கர். கடலோர காவல் படை வேலைவாய்ப்புகளில் மீனவ மாணவர்களுக்கு முன்னுரிமை தர வேண்டும் என்றும் – தமிழ்நாட்டில் மீனவளப் பல்கலைக் கழகங்கள் கூடுதலாக தொடங்கப்பட வேண்டும் என்றும் – மீனவப் பல்கலைக் கழகங்களில் மீனவ மாணவர்களுக்கு இளநிலை அறிவியல் பாடப் பிரிவில் 50 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

சட்டப்பேரவையில் கே.பி. சங்கர் எம்.எல்.ஏ. பேசியதாவது:-

மீனவர்களுக்கு நலவாரியம் அமைத்துத் தந்தது, மீன்பிடி தடைகாலத்திற்கு நாட்டிலேயே முதல் முதலில் நிவாரணம் தந்தது, சுனாமியில் வீடுகளை இழந்த மீனவர்களுக்கு மூன்று லட்சம் தொகுப்பு வீடுகள் கட்டி கொடுத்தது, மீனவர் கூட்டுறவு சங்கத்தில் மகளிரையும் உறுப்பினராக சேர்த்தது, அய்யா சிந்தனை சிற்பி சிங்காரவேலர் பெயரில் வீட்டு வசதி திட்டம் கொண்டு வந்தது, சுனாமியில் விசை படகுகளுக்கு வழங்கப்பட்ட வங்கி கடனை ரத்து செய்தது, மீனவர்களுக்கு மானிய விலையில் டீசல் வழங்கியது என மீனவர்களின் வாழ்வில் வசந்தத்தை தந்த, ஐந்து முறை தமிழ்நாட்டை ஆண்டவன் அய்யா கலைஞர் அவர்களை வணங்கி மீன் வள துறையின் பெயரை மீனவளம் மற்றும் மீனவர் நலத் துறை என்று மாற்றி அமைத்து இது வரை இல்லாத வகையில் ராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் மீனவர்களுக்கு என்று தனி மாநாடு நடத்தி, சுமார் ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து 14 ஆயிரம் மீனவர்களுக்கு 88 கோடி 90 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய மீனவர்களின் நம்பிக்கை, தமிழ்நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க முதல்வர் அவர்களை வணங்கி புயல், மழை, வெள்ளம் போன்ற இயற்கை பேரிடர் காலங்களில், பொதுமக்களை மீட்க அரசோடு இணைந்து உதவிய மீனவர்களுக்கு பாராட்டு விழா நடத்திய தமிழ்நாட்டின் சிறப்பு வாய்ந்த துணை முதல்வர் அவர்களை வணங்கி

வரலாற்றுச் சிறப்பு மிக்க பேரவையில் எனக்கு பேச வாய்ப்பளித்த பேரவை தலைவர் அவர்களுக்கும், அரசு கொறடா அவர்களுக்கும், அமைச்சர்கள், சக சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் என்னை தேர்ந்தெடுத்த என்னுடைய திருவொற்றியூர் தொகுதி மக்களுக்கும் எனது அன்பான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எண்ணூர் மீனவர்களின் கோரிக்கை!**

கன்னியாகுமரி மாவட்டம் நீரோடி மீனவ கிராமம் முதல் திருவள்ளூர் மாவட்டம் கூனங்குப்பம் மீனவ கிராமம் வரையிலான 14 மாவட்டங்களில் உள்ள 592 கடல் சார்ந்த மீனவ கிராம மக்களின் பிரதிநிதியாக மீனவர்கள் மற்றும் மீனவர் நலத்துறை மானிய கோரிக்கையில் என்னுடைய பேச்சை இந்த பேரவையில் பதிவு செய்கிறேன். 60 ஆண்டு கால எண்ணூர் மீனவ மக்களின் கோரிக்கையாக இருந்த கொசஸ்தலை ஆற்று முகத்துவாரம் தூர்வாரி ஆழப்படுத்தி தூண்டில் வளைவு அமைக்கும் பணி ரூபாய் 150 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. எண்ணூர் கொசஸ்தலை ஆறு தூர்வாரும் பணி ரூபாய் 30 கோடி செலவிலும் நடைபெற்று வருகிறது.

அது போல் D கேனல் கால்வாயை முழுவதும் தூர்வார வேண்டும், கத்திவாக்கம் நவீன மீன் மார்க்கெட் ரூபாய் 5 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது. நெட்டுக்குப்பம், தாழங்குப்பம் கடற்கரையில் வலை பின்னும் கூடம் 18 கோடி 50 லட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது.



விம்கோநகர் ரயில்வே சுரங்கப்பாதை அமைக்கும் பணி 25 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. கத்திவாக்கம் பேருந்து நிலையம் ரூபாய் 5 கோடி 50 லட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது, திருவொற்றியூர் பேருந்து நிலையம் 14 கோடி செலவிலும் கட்டப்பட உள்ளது

எண்ணூர் அரசு திருமண மண்டபம் 5 கோடி செலவிலும், திருவொற்றியூர் அரசு திருமண மண்டபம் 17 கோடி செலவிலும், மணலி அரசு திருமண மண்டபம் 9 கோடி 50 லட்சம் செலவிலும் CMDA மூலமாக கட்டப்பட்டு வருகிறது.

கத்திவாக்கம், ராமநாதபுரம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் 5 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது, தொகுதியில் உள்ள பள்ளிகளுக்கு மட்டும் ரூபாய் 25 கோடி செலவில் வகுப்பறை கட்டிடங்கள், ஸ்மார்ட் வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகிறது.

60 ஆண்டு பழமையான கத்திவாக்கம் நூலகம் 3 கோடி செலவிலும், மணலி பாடசாலை தெருவில் 2 கோடி செலவிலும் நூலகம் கட்டப்பட்டு வருகிறது, திருவொற்றியூரில் 13 ஆண்டு கால மாணவர்களின் கனவாக இருந்த திருவொற்றியூர் அரசு கலை கல்லூரி ரீட் கூட்டுறவுக்கு சொந்தமான 2 ஏக்கர் நிலத்தில் 16 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது. மேலும் 1.5 ஏக்கரில் ஐடிஐ கட்டும் பணியும், பாலிடெக்னிக் கல்லூரி 1.5 ஏக்கரில் நிலத்தில் 24 கோடி செலவிலும் கட்டப்பட உள்ளது.

**விம்கோ மெட்ரோ ரயில் – கலைஞர் பெயர்**

ரேசன் கடைகள், அங்கன்வாடி மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், இரவு தங்கும் விடுதிகள், பூங்காக்கள், உடற்பயிற்சி கூடங்கள், கலையரங்கங்கள், சமுதாய நல கூடங்கள், என என்னுடைய திருவொற்றியூர் தொகுதியில் மட்டும் திராவிட மாடல் அரசு சுமார் 625 கோடி மதிப்பில் வளர்ச்சி பணிகள் நடைபெற்று வருகிறது

எப்பொழுது எல்லாம் அய்யா கலைஞர் அவர்கள் ஆட்சி அமைகிறதோ அப்பொழுது மட்டுமே என்னுடைய திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதியும் வளர்ச்சி அடையும், அந்த வகையில் 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற அய்யா கலைஞர் அவர்களின் ஆட்சியில் தான் திருவொற்றியூர் அரசு மருத்துவமனை, தீஅணைப்பு நிலையம், கத்திவாக்கம் மேம்பாலம், எண்ணூர் சாலை விரிவாக்கம், திருவொற்றியூர் சாலை விரிவாக்கம், பாதாள சாக்கடை திட்டம், மெட்ரோ ரயில் சேவை என திருவொற்றியூர் தொகுதி அதிகப்படியான வளர்ச்சி அடைந்தது 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற அய்யா கலைஞர் அவர்களின் ஆட்சியில் தான் திருவொற்றியூரின் தற்போதைய வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாக இருப்பது சென்னை மெட்ரோ இரயில் சேவையாகும் வண்ணாரப்பேட்டை வரை மட்டுமே இயங்கும் என்று அறிவிக்கப்பட்ட மெட்ரோ ரயில் திட்டத்தை திருவொற்றியூர் வரை நீட்டிப்பு செய்து இதுவரை 2 கோடி முறைக்கு மேல் மக்கள் பயன்படுத்திஉள்ளவிம்கோ நகர் மெட்ரோ ரயில் நிலையம் அமைவதற்கு காரணமாக இருந்த, அய்யா கலைஞர் அவர்களின் பெயரை சூட்ட வேண்டும் என்று தொகுதி மக்களின் சார்பாக நன்றியோடு கோரிக்கை வைக்கிறேன்.

மேலும் சென்னையின் துவக்கமாக இருக்கும் எண்ணூர் கத்திவாக்கம் வரை மெட்ரோரயில்சேவையை விரிவுபடுத்த வேண்டும், மாதவரம் விம்கோ நகர் மெட்ரோரயில்சேவையை இணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் திருவொற்றியூரில் கோயில் அடிமனையில் வாழும் சுமார் 1000 குடும்பங்களுக்கு நிலுவையில் உள்ள நிலுவை தொகையை தள்ளுபடி செய்தும், அடிமனை வாடகையை குறைக்க உதவிட வேண்டும், ரீட் கூட்டுறவிற்கு சொந்தமான இடத்தில் அதி நவீன வசதிகள் கொண்ட விளையாட்டு மைதானம் அமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும் திருவொற்றியூர் நீதிமன்றம், வட்டாச்சியர் அலுவலகம், பத்திரப்பதிவு அலுவலகம், உணவு பொருள் வழங்கும் அலுவலகம், என அனைத்து அரசு அலுவலகங்கள் வாடகை கட்டிடங்களில் தான் இயங்கி வருகிறது எனவே ஒருங்கிணைந்த அரசு வளாகம் அமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும், திருவொற்றியூர் பாரதியார் நகரில் மீன்பிடி இறங்கு தளம் அமைக்கும் பணியை விரைவில் துவங்க வேண்டும்

திருவொற்றியூர் பாரதியார் நகர் முதல் சின்ன குப்பம் வரை கடலில் தூண்டில் வளைவுகள் அமைத்து தர வேண்டும் 2004 ஆண்டிற்கு முன்பு போடப்பட்ட தூண்டில் வளைவுகள் மற்றும் கடல் அரிப்பை தடுக்க சாலை ஓரத்தில் போடப்பட்டுள்ள தடுப்பு கற்களை சீரமைக்க வேண்டும்

ஆட்சேபணை இல்லாத இடங்களில் நீண்ட நாட்களாக வாழும் அனைவருக்கும் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்,

கடந்த ஆட்சி காலத்தில் கட்டப்பட்ட திருவொற்றியூர் சூரை மீன்பிடி துறைமுகம் பணிகள் முடிந்து திறப்பதற்கு தயாராக இருக்கிறது என்று சொல்கிறார்கள். முகத்துவாரா நுழைவு வாயில் சரியான வழிமுறையில் இல்லாமல் இருப்பதால், வாயிலை 100 மீட்டர் நீடிக்க வேண்டும் என்றும் மீனவர்கள் கோரிக்கையாக வைக்கிறார்கள்.

**துறைமுக நுழைவு வாயில் நீட்டிப்பு!**

புயல் வெள்ளம் போன்ற காலங்களில் காற்று அதிகமாக வீசி, கடல் அலைகள் கடுமையான சீற்றத்தில் இருக்கும், அந்த சமயத்தில் நுழைவு வாயிலின் உள்ளே விசைப் படகுகள் வர முடியாது, காரணம் என்னவென்றால், தெற்கு பக்கம் இன்னும் 100 மீட்டர் நீடிக்க வேண்டும் . 100 மீட்டர் நீட்டித்தால் மட்டும் தான் அந்த துறைமுகத்தில் மீனவர்கள் தொழில் செய்ய முடியும். இல்லையென்றால் அவர்களுடைய உயிருக்கு மிகப்பெரிய ஆபத்தாக இருக்கும். கடந்த ஆட்சியில் அவசர காலத்தில் அவர்கள் செய்துவிட்டு சென்று விட்டார்கள்,

எனவே அந்த துறை முகத்தின் நுழைவு வாயிலை 100 மீட்டர் நீட்டித்து தர வேண்டுமென்பது மீனவர்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. அதனை நீட்டித்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மிக கொடூரமாக தாக்கப்பட்டு, மோசமான கொடுமைகளை அனுபவித்து வருகிறார்கள். கைது செய்யப்பட்ட மீனவர்களை உடனடியாக மீட்க ஒன்றிய அரசு எந்த வித நடவடிக்கையும் எடுப்பதில்லை

சில மாதங்கள் கழித்து மீனவர்கள் விடுவிக்கப்பட்டாலும் அவர்களின் விசை படகுளை விடுவிப்பது கிடையாது

இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்படும் விசை படகுகளுக்கு வழங்கப்பட்ட நிவாரண தொகை 8 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கியது நம்முடைய திராவிட மாடல் ஆட்சியினுடைய முதலமைச்சர் அவர்கள். இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்படும் மீனவர்களின் விசைப் படகுகளை மீட்க முடியாது என்று ஒன்றிய அரசு அறிவித்துவிடுகிறது

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு சம்பவத்தை நான் இந்த பேரவையில் பதிவு செய்ய விரும்புகிறேன் 13 விசைபடகில் மீன் பிடித்து கொண்டிருந்த 84 மீனவர்களும் இலங்கை அரசால் கைது செய்யபட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது அந்த தகவலை அன்றைய மீன்வளத்துறை அமைச்சராக இருந்த, என்னை ஆளாக்கிய அண்ணன் நினைவில் வாழும் கே.பி.பி.சாமி அவர்கள் அய்யா ஆற்காட்டார் மூலம் அய்யா கலைஞர் அவர்களை இரவு 11.30 மணிக்கு நேரில் சந்தித்து மீனவர்கள் கைது செய்யப்பட்ட தகவலை தெரிவித்தனர்

அப்போது மத்தியில் இருந்த மன்மோகன்சிங் அவர்கள் தலைமையிலான அரசில் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த எஸ்.எம்.கிருஷ்ணா அவர்களை தொடர்பு கொண்டு அய்யா கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்ட மீனவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்கள்.

கோபாலபுரம் இல்லத்திலிருந்து கே.பி.பி.சாமி அவர்கள் திருவொற்றியூர் வருவதற்குள் மீனவர்கள் விடுவிக்கப்பட்டதாக விடுவித்த செய்தி வந்தது.

ஒரே இரவில் 84 மீனவர்களையும் 13 விசைபடகுகளையும் விடுவிக்க வைத்து மீனவர்களின் பாதுகாவலராக வாழ்ந்து வந்த ஐயா கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டு மீனவர்கள் தன் நாட்டு மீனவர்கள் தான் என உதவியது அன்றைய மத்திய காங்கிரஸ் அரசு, ஆனால் இன்றைய ஒன்றிய அரசோ தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது. உலகில் வாழும் அனைத்து இனங்களும் இயற்கையை ஒட்டி வாழும் இனங்களாகும், ஆனால் இயற்கையை எதிர்த்து வாழும் ஒரே இனம் மீனவ இனம். அந்த மீனவர் இனத்தின் நலனை காக்க திராவிட மாடல் அரசு பல்வேறு நல்ல திட்டங்களை செய்து வருகிறது. நாகை துறைமுகம் மேம்படுத்தும் பணி நடந்து முடிந்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது, செருதூர் மற்றும் பழவேற்காடு ஆகிய துறைமுகங்களின்முகத்துவாரங்கள் தூர்வாரும் பணி நடைபெற்று வருகிறது, பழையார் மற்றும் வாணகிரி ஆகிய துறைமுகங்கள் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது, சந்திரபாடி மீன்பிடி இறங்கு தளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இது போல் தமிழ்நாடு முழுவதும் திராவிட மாடல் அரசு பல்வேறு மேம்பாட்டு பணிகள் நடந்து வருகிறது.

**சின்னங்குடி மீன்பிடி இறங்குதளம்!**

மேலும் மடவமேடு மற்றும் திருமுல்லைவாசல் கிராமத்தில் கடல் அரிப்பை தடுக்க தூண்டில் வளைவுகள் அமைத்து தர வேண்டும் என்றும், பூம்புகார் துறைமுகத்தில் அடைந்திருக்கும் மணல் திட்டை அகற்றி துறைமுகத்தை விரிவு படுத்த வேண்டும் என்றும் சின்னங்குடி மீன்பிடி இறங்கு தளம் அமைக்கும் பணியை விரைவில் துவங்க வேண்டும் என்றும், நாகூர் வெட்டாறு சிறு துறைமுகத்தில் தூர்வாரும் பணியை விரைவாக துவங்க வேண்டும்.

மேலும் 2021 ஆம் ஆண்டு சூரை மீன் 1 கிலோ 103 ரூபாய்க்கு விற்கப்பட்டது ஆனால் 2025 ஆம் ஆண்டு 1 கிலோ சூரை மீன் 66 ரூபாயாக ஆக குறைந்துள்ளது. இடைத்தரகர்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்படுவதை தடுத்து, மீன்பிடி துறைமுகங்களை நவீன வசதிகள் கொண்ட மீன் பதப்படுத்தும் நிலையத்தை அரசே துவங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு சூரை மீன் ஏற்றுமதியை வெளிநாடுகளுக்கு அரசே நடத்திட வேண்டும் என்று தங்களின் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி அனைத்து நிலையிலும் மீனவர்களின் நலன் காக்கும் அரசாக மீனவர்களுக்கு துணை நிற்கிறது என்ற நம்பிக்கையோடு மீனவர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்து கொண்டு எல்லோருக்கு எல்லாம் என்ற வகையில் மக்களுக்கு நல்லாட்சி செய்து கொண்டு இருக்கும் நாடு போற்றும் திராவிட மாடல் ஆட்சியில் என்னுடைய தொகுதி சார்ந்த மற்றும் மீனவர் நலன் சார்ந்த கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு விடை பெறுகிறேன், நன்றி வணக்கம் தமிழ்நாடு மீன்வள பல்கலை கழகத்தில் இளநிலை அறிவியல் படிப்பில் மீனவர்களின் குழந்தைகளுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு வழங்கி வேண்டும் கூடுதலாக மீன்வள கல்லூரிகள் துவங்க வேண்டும்.

மீன்வளத்துறையில், கடலோர காவல் படையில் மீனவ மாணவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும், மானிய விலை டீசலை 2500 லிட்டர் உயர்த்தி வழங்கியும், மேலும் ஆழ்கடல் சூரை மீன்பிடி தொழிலை ஊக்குவிக்கும் விதமாக சூரை மீன்பிடி விசைப்படகு கட்ட வழங்கப்பட்டு வரும் மாணியத்தை உயர்த்தி வழங்க வேண்டும் விசைபடகு கட்டுவதற்க்கு மீனவர்களுக்கு குறைந்த வட்டியில் வங்கி கடன் வழங்க வேண்டும்

மீனவர்களின் பாதுகாவலராக விளங்கி கொண்டிருக்கக்கூடிய நமது தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய கச்சத்தீவை மீட்டுத்தருவர் என்பதை மீனவர்களின் உறுப்பினராக இருக்க கூடிய கே.பி.சங்கர் ஆகிய நான் என்னுடைய மீனவர்களின் ஆதரவை தெரிவித்து கொண்டு, நம்முடைய வரலாற்று சிறப்பு மிக்க தமிழ்நாடு முதலவர் அவர்களின் தீர்மானத்தை நான் ஆதரித்து, முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.



திருப்பூர் மாநகராட்சி மைய அலுவலகம், மாமன்ற கூட்டரங்கில் நடைபெற்ற 2025–2026 வரவு செலவு திட்ட அறிக்கை கூட்டத்தில் மாநகராட்சி ஆணையாளர் சு.இராமமூர்த்தி தலைமையில் திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர், ந.தினேஷ்குமார் ஓராண்டு சாதனை விளக்க கால பேழையினை வெளியிட்டார். இதில் துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், மண்டலத்தலைவர்கள் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், சி.கோவிந்தசாமி, தம்பி ஆர்.கோவிந்தராஜ், நிதி குழு தலைவர் கு.கோமதி உள்பட மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் உள்ளனர்.



மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் நீடாமங்கலம் தெற்கு ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி இணைந்து வடுவூர் தென்பாதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி நூற்றாண்டு விழாவில் பள்ளி மாணவ , மாணவிகளுக்கு விளையாட்டு உபகரணங்களை தொழில் மற்றும்முதலீட்டு ஊக்குவிப்பு துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா வழங்கினார். முரசொலி எம்பி., மாவட்ட ஆட்சியர் மோகன சுந்தரம் ஒன்றிய செயலாளர்கள் நா.கவியரசு கே.வி.கே.ஆனந்த் , விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் பி.ஜி.ஆர்.ராஜாராமன் , எழில், ஒன்றிய அமைப்பாளர்கள் பா.கோ.செல்வகுமார், தங்கதுரை, துணை அமைப்பாளர்கள் விஜயராகவன், செந்தமிழ்ச் செல்வன், இலக்கியச் செல்வன், விக்ரமாதித்தன், வீரராஜ், மாவட்ட மகளிரணி தலைவர் ராணி சேகர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.